சுற்றுலா மற்றும் பண்பாட்டு (பண்2) துறை
தலைமைச் செயலகம், சென்னை-9

கடித எண் 5099/பண் 2/07-1, நாள் 26.3.07

அனுப்புநர்

திரு வெ.இறையன்பு, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

பெறுநர்

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,(இணைப்புடன்)
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் (இணைப்புடன்)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18(இணைப்புடன்)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு/தெற்கு/வடக்கு), சென்னை-5/35/79 (இணைப்புடன்)
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை (இணைப்புடன்)
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை-6 (இணைப்புடன்)

ஐயா,

பொருள் : நலிந்த கலைஞர் நிதியுதவித்திட்டம் -2006-07 ஆம் நிதியாண்டில் 500 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க ஆணையிடப் பட்டது - முன்பணம் பெற அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை 1. அரசாணை (நிலை) எண் 34, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, நாள் 20.3.20072. கலைப்பண்பாட்டு இயக்கக ஆணையரின் கடித எண்.4810/ஈ2/2006, நாள் 23.3.07.

பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையில் நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், 2006-2007 ஆம் ஆண்டுக்கான நிதியுதவி பெற தெரிவு செய்து 500 கலைஞர்களுக்கு 1.4.2006 முதல் வாழ்நாள் வரையிலும் நிதியுதவி வழங்க ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் கடிதத்தில் கலை பண்பாட்டு இயக்கக ஆணையர் (பொறுப்பு) அவர்கள், மேலே பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையில் 500 கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை 2006-2007 ஆம் நிதியாண்டு முடிவடைய மிகவும் குறுகிய நாட்களே உள்ளதால், அரசுக்கு திரும்ப இத்தொகையை ஒப்புவிக்கும் சூழலைத் தவிர்க்கும் பொருட்டு, ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள 500 நலிந்த கலைஞர்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள்

முன்பணமாகப் பெற்று மாவட்ட கருவூலங்களிலேயே 1.4.2006 முதல் 31.3.2007 முடியவுள்ள காலத்திற்கு வழங்கவும், ஏப்ரல் 2007 முதல் நலிந்த கலைஞர்களால் கேட்டுக் கொள்ளப்பட்ட கருவூலங்கள்/சார்நிலைக் கருவூலங்கள் மூலம் நிதியுதவி பெற இசைவளித்து ஆணையிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கலை பண்பாட்டு இயக்கக ஆணையரின் கருத்துருவை அரசு ஆய்வு செய்து, 2006-2007 ஆம் ஆண்டில் நலிந்த கலைஞர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் நிதியுதவி வழங்க ஒதுக்கீடு செய்த ரூ.60.00 இலட்சம் 31.3.2007 க்குள் செலவினம் ஆகாமல் திரும்ப அரசுக்கு நிதியுதவி ஒப்புவிப்பு செய்வதை தவிர்க்கும் பொருட்டு பார்வை 1 ல் கண்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள கணக்குத் தலைப்பிலேயே மாவட்ட ஆட்சியர்கள் முன்பணமாகப் பெற்று மாவட்ட கருவூலங்களிலேயே இணைப்பில் கண்டவாறு நிதியுதவி வழங்கவும், ஏப்ரல் 2007 முதல் நலிந்த கலைஞர்களால் கேட்டுக்கொள்ளப்பட்ட சார்நிலைக் கருவூலங்களில் நிதியுதவி பெறவும் அனுமதித்து ஆணை வழங்கப்படுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.121/JS(TM)/2007, நாள் 26.3.07 இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

அரசு செயலாளருக்காக

நகல்

ஆணையர் (பொறுப்பு)
கலை பண்பாட்டு இயக்ககம், சென்னை-28
சிறப்பு ஆணையர், கருவூல கணக்கு அலுவலகம், பனகல் கட்டிடம், சென்னை-15
தலைவர்/உறுப்பினர் செயலர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை-28
நிதித்துறை, சென்னை-9
நிதி (வ.செ பொ II த்துறை, சென்னை-99

**இணைப்பு**

நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் விவரம் 2006-2007

அரசு ஆணை நிலை எண் 34, சுற்றுலா மற்றும் பண்பாடு(பண்2)த் துறை, நாள் 20.03.2007, 01.04.2006 முதல் 31.03.2007 வரை மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் நபர் ஒருவருக்கு 12 மாதங்களுக்கு ரூ.12,000/- வீதம்

| வ.எண் | மாவட்டங்களின் பெயர் | நிதியுதவி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | மொத்தத் தொகை |
|---|---|---|---|
| 1 | சென்னை | 32 | 3,84,000 |
| 2 | காஞ்சிபுரம் | 33 | 3,96,000 |
| 3 | திருவள்ளூர் | 7 | 84,000 |
| 4 | வேலூர் | 43 | 5,16,000 |
| 5 | திருவண்ணாமலை | 23 | 2,76,000 |
| 6 | விழுப்புரம் | 20 | 2,40,000 |
| 7 | கடலூர் | 15 | 1,80,000 |
| 8 | தஞ்சாவூர் | 36 | 4,32,000 |
| 9 | நாகப்பட்டினம் | 17 | 2,04,000 |
| 10 | திருவாரூர் | 20 | 2,40,000 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 15 | 1,80,000 |
| 12 | பெரம்பலூர் | 9 | 1,08,000 |
| 13 | புதுக்கோட்டை | 2 | 24,000 |
| 14 | கரூர் | 5 | 60,000 |
| 15 | சேலம் | 22 | 2,64,000 |
| 16 | நாமக்கல் | 9 | 1,08,000 |
| 17 | தருமபுரி | 35 | 4,20,000 |
| 18 | கிருஷ்ணகிரி | 6 | 72,000 |
| 19 | ஈரோடு | 6 | 72,000 |
| 20. | கோயம்புத்தூர் | 5 | 60,000 |
| 21. | மதுரை | 39 | 4,68,000 |
| 22. | தேனி | 7 | 84,000 |
| 23. | திண்டுக்கல் | 7 | 84,000 |
| 24. | இராமநாதபுரம் | 17 | 2,04,000 |
| 25. | சிவகங்கை | 21 | 2,52,000 |
| 26. | விருதுநகர் | 21 | 2,52,000 |
| 27. | திருநெல்வேலி | 9 | 1,08,000 |
| 28. | தூத்துக்குடி | 8 | 96,000 |
| 29. | கன்னியாகுமரி | 11 | 1,32,000 |
| | மொத்தம் | 500 | 60,00,000 |

வெ.இறையன்பு
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்